Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 182 | உள்ளூர் - 01.07.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 182 | வெளியூர் - 02.07.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

வாழ்க்கைக்கு உதவும் எளிய பரிகாரங்கள்!

ரயில்வேயில் மெகா வேலைவாய்ப்பு.. 6,565 காலியிடங்கள்..!

ஜூலை 20-ல் நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர்?

தவெக தலைமையில் புதிய கூட்டணி?

# ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி பேச்சு!

புதுடெல்லி, ஜூலை. 01–

பிரதமர் மோடி ஈரான் அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகள் குறித்து ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியானுடன் உரையாடினேன்.



பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்றதுடன், தொடர்ச்சியான முயற்சிகள் மத்திய கிழக்கு பகுதியில் நீடித்த அமைதியை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தேன்.

ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கப்பல் போக்குவரத்து இந்தியாவிற்கும், உலகத்திற்கும் முக்கியமானது என்பதை மீண்டும் வலியுறுத்தினேன்" என்று பதிவிட்டுள்ளார்.

# டிரம்புக்கு 'செக்'... பிறப்பால் குடியுரிமை!

அமெரிக்கா, ஜூலை. 01–

அமெரிக்காவில் பிறந்த குழந்தைகளுக்கு ஆட்டோமேட்டிக் முறையில் குடியுரிமை வழங்கும் அந்நாட்டு சட்டத்தை ரத்து செய்யும் டிரம்ப்பின் முயற்சி உச்ச நீதிமன்றத்தால் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளது. செவ்வாய்க்கிழமை வெளியான தீர்ப்பு மூலம் கோடிக்கணக்கான அமெரிக்க வாழ் வெளிநாட்டினர் குறிப்பாக இந்தியர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடி



வருகின்றனர். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு டிரம்ப்–ன் முயற்சிக்கு இரண்டாவது பெரும் தோல்வியாகும்.

ஏற்கனவே கீழ் நீதிமன்றம் டிரம்ப்–ன் இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் டிரம்ப் அரசின் உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் தடை விதித்திருந்தது. இதை தொடர்ந்து அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு, இன்றைய இறுதிக்கட்ட விசாரணையில் 6–3 என்ற வாக்கெடுப்பில் கீழ் நீதிமன்ற உத்தரவை சரியானது என்று இத்தீர்ப்பை வழங்கப்பட்டு உள்ளது.

# உங்கள் பணத்தைப் பாதிக்கும் 8 புதிய விதிகள் அமல்..!

புதுடெல்லி, ஜூலை. 01–

ஜூலை 1, 2026, அதாவது முதல் இந்தியப் பொருளாதாரத்தில் பல முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வங்கி விதிகள், கடவுச்சீட்டுக் கட்டணம் மற்றும் பெட்ரோல் விலை போன்ற மக்களைப் பாதிக்கும் வகையிலான புதிய நடைமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. அந்தப் புதிய விதிகள் என்னென்ன என்பதை பார்க்கலாம்..

சென்னையில் வணிக சிலிண்டரின் விலை ரூ.172.50 குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலை மாற்றம் இன்று (ஜூலை 1) முதல் நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளது.

இந்த விலைக்குறைப்புக்குப் பிறகு, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டரின் விலை ரூ.3,106 ஆகக் குறைந்துள்ளது. எனினும், வீட்டு உபயோகத்திற்கான 14.2 கிலோ எல்பிஜி சிலிண்டர் நுகர்வோருக்கு இந்த முறை எந்தவித விலைக் குறைப்பும் அறிவிக்கப்படவில்லை. வீட்டு உபயோக சிலிண்டரின் விலை எவ்வித மாற்றமுமின்றி ரூ.957.50 என்ற அளவிலேயே நீடிக்கிறது. மேற்காசிய போர் சூழல் காரணமாக கடந்த 4 மாதங்களாக உயர்ந்து வந்த சிலிண்டரின் விலை தற்போது குறைந்துள்ளது. இதனால் வணிகர்கள் சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.

பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை மீதான முந்தைய கட்டுப்பாடுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன. விநியோகச் சிக்கல்கள் இருந்த போது இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இனி ஜூலை 1 முதல் டீசல் வாங்குவதில் எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. வணிக மற்றும் தொழில்முறை நுகர்வோரும் தடையின்றி எரிபொருளைப் பெற முடியும். நிலைமை சீரடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.




மொபைல் செயலி மூலம் ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்கக் கட்டணம் ஏதுமில்லை என்று இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) அறிவித்துள்ளது. முன்பு இச்சேவைக்கு ரூ. 75 கட்டணம் வசூலிக்கப்பட்டது. இனி ஜூலை 1 முதல் டிசம்பர் 31, 2026 வரை, அதாவது 6 மாதங்களுக்கு இது இலவசமாக இருக்கும். டிஜிட்டல் முறையில் தகவல்களைப் புதுப்பிப்பதை எளிதாக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சகம் பாஸ்போர்ட் கட்டணங்களை மாற்றியமைத்துள்ளது. புதிய கட்டண விகிதங்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அமலுக்கு வரும். 36 பக்கங்கள் கொண்ட கடவுச்சீட்டிற்கு, சாதாரண சேவைக்கு ரூ. 2,500–ம், தட்கல் சேவைக்கு ரூ. 5,000–ம் கட்டணமாகும். 60 பக்கங்கள் கொண்ட கடவுச்சீட்டிற்கு, சாதாரண சேவைக்கு ரூ. 3,500–ம், தட்கல் சேவைக்கு ரூ. 6,000–ம் கட்டணமாகும். சிறார்களுக்கு மற்றும் பாஸ்போர்ட் மாற்றீடு செய்வதற்கான கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளன. 2012–க்குப் பிறகு மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய மாற்றம் இதுவாகும்.

ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (EPFO) இணையவழிச் சேவைகள் ஜூலை 1 முதல் மீண்டும் செயல்படத் தொடங்கும். கணினி அமைப்பை மேம்படுத்தும் பணிக்காக ஜூன் 26 முதல் ஜூன் 30 வரை இச்சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தற்போது அனைத்து டிஜிட்டல் சேவைகளும் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன.

SBI Card நிறுவனம், PhonePe–உடன் இணைந்து வழங்கப்படும் சில கிரெடிட் கார்டுகளுக்கான 'ரிவார்டு பாயிண்ட்' (வெகுமதிப் புள்ளி) முறையை மாற்றியுள்ளது. 'PhonePe SBI Credit Card Purple' மற்றும் 'PhonePe SBI Credit Card Select Black' ஆகியவற்றிற்கான வெகுமதிகள் குறைக்கப்பட்டுள்ளன. இனி சில பரிவர்த்தனைகளுக்கு வெகுமதிப் புள்ளிகள் கிடைக்காது. HDFC வங்கி தனது விமான நிலைய ஓய்வறை (lounge) பயன்பாட்டுக் கொள்கையை மாற்றியுள்ளது. ஒவ்வொரு காலாண்டிலும் 3 முறை உள்நாட்டு விமான நிலைய ஓய்வறையை இலவசமாகப் பயன்படுத்த, முந்தைய காலாண்டில் குறைந்தபட்சம் ரூ. 60,000 செலவு செய்திருக்க வேண்டும். அதாவது, இந்தச் சலுகைகள் உங்கள் செலவு செய்யும் முறையைப் பொறுத்தே அமையும்.

2025–26 நிதியாண்டு மற்றும் 2026–27 மதிப்பீட்டு ஆண்டிற்கான ITR–1 மற்றும் ITR–2 படிவங்களைச் சமர்ப்பிப்பவர்கள், 2026 ஜூலை 31–க்குள் தங்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய வேண்டும். இந்தக் காலக்கெடுவைத் தவறவிட்டால் அபராதம் விதிக்கப்படலாம். சில வரி முறைகளைத் தேர்ந்தெடுப்பதில் கட்டுப்பாடுகள் ஏற்படலாம். மேலும், நஷ்டத்தை அடுத்தடுத்த ஆண்டுகளுக்குக் கொண்டு செல்லும் (carry forward) வாய்ப்பும் பறிபோகலாம். அதனால்தான் சரியான நேரத்தில் கணக்கைத் தாக்கல் செய்வது மிகவும் முக்கியம்.

இந்திய ரிசர்வ் வங்கி ஒரு புதிய விதிமுறை கட்டமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. வங்கிகள் தவறான நிதித் தயாரிப்புகளை விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். காப்பீடு மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் போன்ற தேவையற்ற தயாரிப்புகள் விற்கப்பட்டால், வாடிக்கையாளர்களுக்கு முழுத் தொகையும் திரும்ப வழங்கப்படும். அத்துடன், இழப்பு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடும் வழங்கப்படும். இது நுகர்வோர் பாதுகாப்பை அதிகரிக்கும்.

இந்த புதிய மாற்றங்கள் மக்களின் நிதி சார்ந்த வாழ்க்கையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சில இடங்களில் வசதிகள் அதிகரித்தாலும், வேறு சில இடங்களில் செலவுகளும் விதிமுறைகளும் கடுமையாக்கப்படுகின்றன. எனவே, சரியான நேரத்தில் தகவல்களை அறிந்து கொள்வதும், கவனமாக நிதி சார்ந்த முடிவுகளை எடுப்பதும் முன்னெப்போதையும் விட இப்போது மிகவும் அவசியமாகியுள்ளது.

## 126 ஆண்டுகள்...

# ஒரே ஒரு மோசமான ஜூன்! பருவமழை கடுமையாக

## ஏமாற்றிய ஆண்டு!!

புதுடெல்லி, ஜூலை. 01–

கடந்த 126 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, ஜூன் மாதத்தில் நாடு மூன்றாவது மிக மோசமான மழைப்பொழிவைக் காண வாய்ப்புள்ளது. திங்கட்கிழமை வரை, நாடு வெறும் 92.1 மி.மீ பருவமழையை மட்டுமே பெற்றுள்ளது, இது 42% பற்றாக்குறையாகும்.



1901–ஆம் ஆண்டு முதல், ஜூன் மாத மழைப்பொழிவு 100 மி.மீ–க்கும் குறைவாகப் பதிவானது நான்கு முறை மட்டுமே. இதில் மிக மோசமான ஆண்டு 2009 ஆகும், அப்போது நாடு வெறும் 87.5 மி.மீ மழையை மட்டுமே பெற்றது. இரண்டாவது மோசமான ஆண்டு 1905–ல் பதிவான 92.3 மி.மீ ஆகும். இன்றுடன் இந்த மாதம் முடிவடையும் நிலையில், இந்த ஜூன் மாதம் இதுவரை இல்லாத அளவுக்கு வறண்ட மாதமாக இருக்க வாய்ப்புள்ளது.

இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) பதிவுகளின்படி, ஜூன் மாத மழைப்பொழிவு 100 மி.மீ–க்கும் குறைவாகப் பதிவான மற்ற இரண்டு ஆண்டுகள் 2014 (93 மி.மீ) மற்றும் 1926 (97.4 மி.மீ) ஆகும். ஜூன் மாதத்தில் குறைந்த மழைப்பொழிவு பதிவான மற்ற மூன்று ஆண்டுகள் 1902 (109 மி.மீ), 1912 (106.8 மி.மீ) மற்றும் 1923 (101.7 மி.மீ) ஆகும். நீண்டகால சராசரி ஜூன் மாத மழைப்பொழிவு 165 மி.மீ–க்கு மேல் உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை தாமதமாகத் தொடங்கி, 11 நாட்கள் தாமதமானது. விவசாயத்தைப் பொறுத்தவரை, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட மத்திய, வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவுக்குள் இது இன்னும் நுழையவில்லை.

பருவமழை தொடங்கிய போதிலும், மகாராஷ்டிரா, ஒடிசா, பீகார், சத்தீஸ்கர் மற்றும் தெலங்கானாவில் மழைப்பொழிவு கணிசமாகக் குறைந்துள்ளது.

ஜூன் 27 அன்று தேசியத் தலைநகர் டெல்லியில் பருவமழை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது தொடங்கவில்லை. ஜூலை முதல் வாரத்தில் டெல்லியில் மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இருப்பினும், பருவமழை வலுப்பெற்றாலும் அது நீண்ட காலம் நீடிக்காது என்று ஒரு மூத்த வானிலை நிபுணர் கூறியுள்ளார்.

வலுவான எல் நினோ குறித்த அச்சத்தின் காரணமாக, இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) கடந்த மாதம் தனது நீண்டகால பருவமழை முன்னறிவிப்பை, ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான சராசரி மழையளவில் 90 சதவீதமாகத் திருத்தியமைத்தது. பருவமழைப் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்ற எச்சரிக்கைகள் விவசாயிகளிடையே கவலைகளை எழுப்பியுள்ளன.

ஜூன் மாதத்தில் மழை குறைவாகப் பெய்திருந்தாலும், மழையின் பரவலையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், இப்போது பீதியடையத் தேவையில்லை என்று வானிலை நிபுணர்கள் கூறுகின்றனர்.

"பருவமழை தொடங்கியுள்ள மாநிலங்களைப் பார்த்தால், இதுவரை நல்ல மழை பெய்துள்ளது. மேலும், கடந்த ஆண்டு பெய்த அதிக மழையின் காரணமாக நிலத்தடி நீர் மற்றும் நீர்த்தேக்கங்களின் நிலையும் மோசமாக இல்லை," என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தின் முன்னாள் தலைமை இயக்குநர் கே.ஜே. ரமேஷ் டெக்கன் ஹெரால்டு பத்திரிகையிடம் தெரிவித்தார்.

2015–ல் வலுவான எல் நினோ இருந்தபோதிலும், பருவமழைக் காலம் 14 சதவீதப் பற்றாக்குறையுடன் முடிவடைந்தபோது, உணவு தானிய உற்பத்தியில் 12 லட்சம் டன்கள் மட்டுமே பற்றாக்குறை இருந்தது என்று ரமேஷ் கூறினார். 'நேர்மறை இந்தியப் பெருங்கடல் இருமுனை' (PIOD) எல் நினோவின் பாதகமான விளைவு களை ஓரளவிற்குத் தணித்திருந்தது. 2015–16 ஆம் ஆண்டில், உணவு தானிய உற்பத்தி 11.82 மில்லியன் டன்களாக இருந்தது, இது மத்திய அரசின் இலக்கை விட 4.5 சதவீதம் குறைவாகும்.

இந்த முறை, பலவீனமான பருவமழையால் பாதிக்கப்படக்கூடிய சுமார் 315 பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களை மத்திய வேளாண் அமைச்சகம் அடையாளம் கண்டுள்ளது. இவற்றில், 25 சதவீதத்திற்கும் குறைவான நீர்ப்பாசன வசதி உள்ள 111 மாவட்டங்கள் உயர் முன்னுரிமைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 76 மாவட்டங்கள், 25 முதல் 50 சதவீதத்திற்கு இடைப்பட்ட நீர்ப்பாசன வசதி உள்ள நடுத்தர முன்னுரிமைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் பெரும்பாலானவை மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், கர்நாடகா, பீகார், ஜார்க்கண்ட், தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசா உள்ளிட்ட 12 மாநிலங்களில் பரவியுள்ளன. டெல்லியின் பல பகுதிகளில் கடும் வெப்ப அலை நிலவியது. ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் ஹரியானா மற்றும் டெல்லியின் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்ததால், இன்று (செவ்வாய்க்கிழமை) மேலும் மழை பெய்ய வாய்ப்பில்லை என இந்திய வானிலை ஆய்வு மைய (IMD) அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# 'பார்' அனுமதி மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பு: டாஸ்மாக் நிர்வாகம் அதிரடி உத்தரவு!!

சென்னை, ஜூலை. 01–

டாஸ்மாக் பார்களுக்கான உரிமத்தை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டித்து டாஸ்மாக் நிர்வாகம் உத்தரவு பிறப்பித்துள்ளது. புதிய டெண்டர் நடைமுறைகள் இறுதி செய்யப்படாததால், தற்போதைய பார்கள் தொடர்ந்து செயல்பட இந்த தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



# தலையங்கம் — மதுரை மணி

**புதன்கிழமை 01.07.2026**
**விசுவாவசு தமிழ் வருடம்**
**ஆனி மாதம் 17-ம் தேதி**

## போர்களோ, கச்சா எண்ணெயோ அல்ல..! இந்தியாவுக்கு முன்னால் உள்ள உண்மையான அச்சுறுத்தல்..!



பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்திற்கு மாறாக அதிகரிக்கும் ‘எல் நினோ’ (El Nino) வானிலை நிகழ்வு, இந்தியாவின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். உலகளாவிய வானிலை சுழற்சிகளை சீர்குலைக்கும் இந்த நிகழ்வு, முக்கியமாக இந்திய பருவமழையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வரும் நாட்களில் எல் நினோவினால் நாட்டில் பல தீவிர சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று வானிலை மற்றும் பொருளாதார நிபுணர்கள் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்து வருகின்றனர். எல் நினோ தாக்கத்தால் இந்தியாவில் ஏற்படக்கூடிய முக்கிய சிக்கல்கள் பின்வருமாறு அமையலாம்..

**மழைப்பொழிவு பற்றாக்குறை:** பொதுவாக, எல் நினோ சூழல் நிலவும் ஆண்டுகளில், இந்தியாவில் தென்மேற்கு பருவமழை வலுவிழக்கிறது. நாட்டின் விவசாயம் மற்றும் நீர் தேவைகளுக்கு இந்த தென்மேற்கு பருவமழையே மிக முக்கியமானது. எல் நினோ காரணமாக வானிலை சுழற்சி மாறி, நாடு முழுவதும் இயல்பை விட மிகக் குறைந்த அளவே மழை பதிவாகிறது. குறிப்பாக தக்காண பீடபூமி மற்றும் மத்திய, வடமேற்கு மற்றும் தென்னிந்தியாவின் பல மாநிலங்கள் கடுமையான மழைப்பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஏற்கனவே, ஜூன் மாதத்தில் 40 சதவீதம் குறைவான மழையே பதிவாகியுள்ளது.

விவசாயத் துறைக்கு மீளமுடியாத பாதிப்பு: இந்தியாவின் விவசாயத்தில் பாதிக்கும் மேற்பட்டவை இன்றும் மழையைச் சார்ந்தே உள்ளன. எல் நினோ காரணமாக சரியான நேரத்தில் மழை பெய்யாதது அல்லது மிகக் குறைந்த அளவே மழை பொழிவது போன்றவை ‘காரிஃப்’ (Kharif) பருவ சாகுபடியில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். நெல், பருத்தி, சோயாபீன்ஸ், கரும்பு மற்றும் பயறு வகைகள் போன்ற முக்கிய பயிர்களின் விளைச்சல் பெருமளவு குறையும். பயிர்கள் கருகிப்போவதால், விவசாயிகள் தாங்கள் செய்த முதலீட்டைத் திரும்பப் பெற முடியாமல் கடும் கடன் சுமைக்கு ஆளாவார்கள். விவசாயத்தைச் சார்ந்திருக்கும் கிராமப்புற பொருளாதாரம் முழுமையாகச் சீர்குலையும் அபாயம் உள்ளது.

**நீர் மற்றும் மின்சாரத் தட்டுப்பாடு தீவிரமடைதல்:** மழை இல்லாததால், நாட்டின் முக்கிய அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளில் நீர்மட்டம் குறையும். இது குடிநீர் மற்றும் பாசன நீருக்குக் கடுமையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தும். நிலத்தடி நீர்மட்டம் கணிசமாகக் குறைந்து, நகரங்கள் மற்றும் கிராமங்களில் நீர் நெருக்கடி ஏற்படும். மேலும், நீர்த்தேக்கங்களில் நீர் இல்லாததால் நீர்மின் உற்பத்தி நின்றுபோய், அனல் மின் உற்பத்தியின் மீது கூடுதல் சுமை ஏற்படும். இதன் விளைவாக, நாடு முழுவதும் பெரிய அளவிலான மின்வெட்டு ஏற்பட வாய்ப்புள்ளது.

**பணவீக்கம் :** பொருளாதாரத்திற்கு ஒரு பெரும் அச்சுறுத்தல்: விவசாய விளைச்சல் குறைவதால், சந்தையில் உணவு தானியங்கள், சமையல் எண்ணெய்கள், காய்கறிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விண்ணைத் தொடும் அளவுக்கு உயரும். இது உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்கு (உணவுப் பணவீக்கம்) நேரடியாக வழிவகுக்கும். இது சாமானிய மற்றும் நடுத்தர வர்க்க மக்களின் குடும்ப பட்ஜெட்டில் பெரும் சுமையை ஏற்படுத்தும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி வட்டி விகிதங்களை உயர்த்த வேண்டியிருக்கும்; இது தொழில் வளர்ச்சியை மந்தமாக்குவதுடன், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

வெப்பநிலை உயர்வு : உடல்நலப் பிரச்சினைகள்: ‘எல் நினோ’ (El Nino) காலங்களில் மழைப்பொழிவு குறைவது மட்டுமல்லாமல், பகல்நேர வெப்பநிலையும் வழக்கத்தை விட மிக அதிக அளவை எட்டுகிறது. கடுமையான வெப்ப அலைகள் மக்களிடையே பீதியை ஏற்படுத்தக்கூடும். மக்கள் வெப்பத் தாக்குதல் (heatstroke), நீர்ச்சத்து இழப்பு மற்றும் வெப்பம் தொடர்பான பாதிப்புகளால் அவதிப்படுவதுடன், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் மற்றும் தண்ணீர் கிடைப்பதில் ஏற்படும் தட்டுப்பாட்டால் பால் பண்ணைத் தொழிலும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.

‘எல் நினோ’வால் ஏற்படும் இந்த இயற்கை பேரிடரை எதிர்கொள்ள மத்திய மற்றும் மாநில அரசுகள் முன்கூட்டியே திட்டங்களை வகுக்க வேண்டும். வறட்சி மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துதல், நீர் பயன்பாட்டிற்குக் கட்டுப்பாடுகளை விதித்தல், மாற்றுப் பயிர்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் விதைகளை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

## ஈரான் மீது மற்றொரு தாக்குதல்: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை!

டெஹ்ரான், ஜூலை. 01–



தேவைப்பட்டால் ஈரான் மீது மற்றொரு தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். மேற்காசியாவில் பல மாதங்களாக நீடித்துவரும் பிராந்திய பதற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் அமெரிக்காவும், ஈரானும் ஒரு அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்த சூழலில், தேவைப்பட்டால் ஈரான் மீது மீண்டும் தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராக உள்ளது என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார். இது ராணுவ நடவடிக்கைக்கான சாத்தியக்கூறுகள் இன்னும் உள்ளன என்பதை உணர்த்துகிறது.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியதாவது: ஈரான் அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தடுக்க இஸ்ரேல் தனித்துச் செயல்படும். ஈரானின் அணுகுண்டுகளிலிருந்து நாங்கள் எங்களைக் காப்பாற்றிக் கொண்டோம். தேவைப்பட்டால் இஸ்ரேல் மீண்டும் ஈரான் மீது தாக்குதல் நடத்தக்கூடும். இவ்வாறு நெதன்யாகு கூறியுள்ளார்.

## அமைச்சர் சரத்குமாரிடம் விசாரணை; புகார் நிரூபணமானால் பதவி பறிப்பு!

சென்னை, ஜூலை. 01–



போதைப்பொருள் பயன்படுத்தியதாக எழுந்த புகார் குறித்து மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமாரிடம், தமிழக வெற்றிக் கழகத்தின் குழு விசாரணை நடத்தி வருகிறது.

அமைச்சர் சரத்குமார் கடந்த 2022ல் சென்னையில் நடந்த ஐ.பி.எல்., போட்டியை பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட வீடியோ வெளியாகி, சர்ச்சையை கிளப்பியுள்ளது. அந்த வீடியோவில், அவர் கோகைன் என்ற போதைப்பொருளை பயன்படுத்திய காட்சி இருப்பதாக எதிர்க்கட்சியினர் பிரச்னை எழுப்பி வருகின்றனர்.

ஆனால், உடல்நிலை சரியில்லாத குழந்தைக்கு கொடுப்பதற்காக மாத்திரையை தூளாக்கியதாக அவர் விளக்கமளித்தார். இதை ஏற்காமல், தி.மு.க.,வினர் போராட்டங்களில் இறங்கி உள்ளனர்.

இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்து, சமூக வலைதள பக்கங்களில் பலரும் வீடியோக்கள் வெளியிட்டு வருகின்றனர். சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் மற்றும் ஏழு தொகுதிகள் இடைத்தேர்தல் நெருங்கி வரும் நிலையில், இது, அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, சம்பவத்தின் உண்மைத்தன்மை குறித்து ஆராய்ந்து, அமைச்சர் சரத்குமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி, முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, த.வெ.க., தலைமை விசாரித்து வருவதாக, மின்சார துறை அமைச்சர் நிர்மல்குமார் நேற்று வெளிப்படையாக அறிவித்தார்.

இது குறித்து, த.வெ.க., வட்டாரத்தில் கூறப்படுவதாவது: முதல்வர் விஜய் உத்தரவுப்படி, இரண்டு எம்.எல்.ஏ.,க்கள் மற்றும் இரண்டு மாவட்ட செயலர்கள் அடங்கிய குழுவினர், அமைச்சர் சரத்குமாரிடம் விசாரித்து வருகின்றனர்; அவரை நேரில் அழைத்து ஆதாரங்களை சமர்ப்பிக்கும்படி கேட்டு உள்ளனர். ஸ்டேடியத்தில் அவரது குழந்தை இருந்ததற்கான போட்டோக்கள் இல்லை. விசாரணைக்கு குடும்பத்துடன் நேரில் ஆஜரான அமைச்சர் சரத்குமார், தன் குழந்தை மீது சத்தியம் செய்து, தனக்கு போதை பவுடர் பயன்படுத்தும் பழக்கமில்லை என்று கூறி அழுதார்.

இதையடுத்து, அவரை அனுப்பி வைத்து விட்டு, நண்பர்களிடம் ரகசிய விசாரணை நடந்து வருகிறது. விசாரணை முடிவில், அமைச்சர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவரது பதவி பறிக்கப்படும். இவ்வாறு அக்கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது.

## அரசு வேலை மோசடி புகார்- சிவசங்கர் ஆஜர்!

சென்னை, ஜூலை. 01–



போக்குவரத்து துறையில் அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி நடைபெற்றதாகக் கூறப்படும் பண மோசடி தொடர்பான புகாரில் விசாரணையின் ஒரு பகுதியாக, முன்னாள் அமைச்சர் சிவசங்கருக்கு சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் சம்மன் அனுப்பினர்.

அதில் , ஜூலை 1–ம் தேதி (இன்று) காலை 10 மணிக்கு சென்னை வேப்பேரி காவல் ஆணையர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் மத்திய குற்றப்பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தற்போது முன்னாள் அமைச்சர் சிவசங்கர் ஆஜராகியுள்ளார்.

## 2034-ம் ஆண்டுக்குள் தமிழகம் ரூ.94 லட்சம் கோடி பொருளாதாரத்தை எட்டும்!

சென்னை, ஜூலை. 01–



2034–ம் ஆண்டுக்குள் தமிழகம் ரூ.94 லட்சம் கோடி பொருளாதாரத்தை எட்டும் என்று பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழு தலைவர் மகேந்திர தேவ் தெரிவித்துள்ளார்.

**இலக்கு**

சென்னையில் ‘விக்சித் பாரத் 2047–ஐ நோக்கிய தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு’ என்ற கருத்தரங்கு நடந்தது. அதில் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுத் தலைவர் எஸ்.மகேந்திர தேவ் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இருப்பதால், இந்தியாவின் வளர்ச்சியில் மாநிலத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. தமிழ்நாடு ஏற்கனவே 2036–க்குள் ரூ.141 லட்சம் கோடி (1.5 டிரில்லியன் டாலர்) பொருளாதாரத்தை எட்டும் இலக்கை நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு வருமான உயர்வு மட்டுமின்றி வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் கவனம் செலுத்த வேண்டும். தமிழ்நாடு ஆண்டுதோறும் 9 சதவீத உண்மையான பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து பதிவு செய்தால், 2033–34–ம் ஆண்டுக்குள் ரூ.94 லட்சம் கோடி (1 டிரில்லியன் டாலர்) பொருளாதாரமாக மாறும்.

**உண்மையான வளர்ச்சி**

கடந்த 2005–ம் ஆண்டு முதல் 2011–ம் ஆண்டு வரை தமிழ்நாடு சராசரியாக 10 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. பின்னர் 2012–13 முதல் 2022–23 வரையிலான காலகட்டத்தில் வளர்ச்சி சுமார் 6 சதவீதமாக குறைந்தது. ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் வளர்ச்சி மீண்டும் வேகமடைந்துள்ளது. 2024–25–ம் ஆண்டில் தமிழ்நாடு 11 சதவீத உண்மையான ஜி.டி.பி. வளர்ச்சியை பதிவு செய்தது. 2025–26–ம் ஆண்டில் மாநிலம் 13 முதல் 15 சதவீத பெயரளவு வளர்ச்சியும், 10 முதல் 11 சதவீத உண்மையான வளர்ச்சியும் பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழகத்தில் இளைஞர் வேலையின்மை விகிதம் 14 சதவீதமாக இருக்கிறது. இது தேசிய சராசரியான 9.9 சதவீதத்தை விட அதிகம். இதற்கு காரணம் தமிழ்நாட்டில் கல்வி கற்ற இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதுதான். அவர்கள் தங்களது தகுதிக்கு ஏற்ற நல்ல வேலைவாய்ப்புக்காக காத்திருப்பதால் வேலையின்மை விகிதம் அதிகமாக தெரிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.



## வாழ்க்கைக்கு உதவும் எளிய பரிகாரங்கள்..!

**கடுகு எண்னை**

1.கிரகங்களில் செவ்வாயை வலுப்படுத்த மிகவும் உதவும். கடன் கொடுத்தோ, பெற்றோ அவதிப்படுவோர் கட்டாயம் கடுகு எண்ணையில் உணவு சமைத்து சாப்பிட நன்மை உண்டாகும்.

2.வாகன விபத்து அடிக்கடி நடக்கும் தன்மை உடையோர், நில மற்றும் மனை கட்டி தருதல் போன்ற வியாபாரம் செய்வோர் கடுகு எண்ணையில் மாதம் ஒரு முறை உடல் முழுதும் தடவி குளிக்க நன்மை பெருகும். மேலும் செவ்வாய் தோஷம் உள்ளோர்களும்,கணவன்–மனைவி சண்டை அடிக்கடி நடக்கும் குடும்பங்களும் இதை செய்யலாம். திருமணம் தாமதம் ஆகும் இளைஞ்சஇளைஞ்சிகளும் இப்படி செய்யலாம்.



3. ஒருவருக்கு தொடர்ந்து உடல் பிரச்சனைகள் இருந்து கொண்டு இருந்தால் கடுகு எண்ணையை ஒரு கிண்ணத்தில் விட்டு சம்பந்தப்பட்டவரை கிழக்கு முகமாக நிற்க வைத்து ஏழு முறை அவர் தலையை சுற்றி ‘‘ஓம் பைரவாய நமஹ’’ மந்திரம் 108 கூறி வாசலில் எண்ணையை கொட்டிட சீக்கிரம் குணம் உண்டாகும். வெகு நாள் மருத்துவத்தில் உள்ளோர் 8 நாட்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

**4.குடும்ப அமைதிக்கு எளிமையான பரிகாரம்;**

குடும்பத்தில் சண்டை, சச்சரவு,அமைதியின்மை,வீட்டிற்குள் நுழையவே பிடிக்காத தன்மை,எதற்கெடுத்தாலும் எரிச்சல் போன்றவற்றை நீக்க கூடியது. செய்து பயன் அடையுங்கள்.

இதை செவ்வாய்,சனி தவிர்த்து மற்ற நாட்களில் செய்யலாம், குறிப்பிட்ட நேரம்,திசை எதுவும் இல்லை.

(1) ஒரு வெள்ளை துணியில் கையளவு வெல்லம்,கையளவு கோதுமை (மாவு அல்ல), கையளவு கல் உப்பு,2 செம்பு நாணயங்கள் ஆகியவற்றை சேர்த்து கட்டி வீட்டில் பூஜையறை அல்லது வடகிழக்கு மூலையில் வைத்து விடவும். கட்டி தொங்க விட அவசியமில்லை.மாதம் ஒரு முறை மாற்றி விடலாம்.இது குடும்ப அமைதிக்கு சிறந்த முறையாகும். குறிப்பிட்டு கணவன் மனைவி சண்டை எனில் மேற்கூறியதில் செம்பு நாணயத்திற்கு பதில் வெள்ளி நாணயம் வைத்து விடவும். பலன் மிகும்.

5) ஒருவருக்கு ஜாதகத்தில் சந்திரன் கெட்டிருந்தால் மன அமைதி குறைவு, தெளிவின்மை, எப்போதும் சிந்தனைகள், பண விவகாரங்களில் தடை போன்றவை இருந்து கொண்டே இருக்கும், அப்படி பட்டவர்கள், ஒரு ஞாயிறு அன்று இரவு படுக்கும் முன் காய்ச்சாத பசும் பால் ஒரு ஸ்டீல் அல்லது வெள்ளி டம்ப்லரில் (TUM–BLER) தன் தலைக்கு அருகில் வைத்து தூங்கி விடவும். பின்பு காலையில் அதை அப்படியே கொண்டு சென்று கருவேல மரத்தின் வேருக்கு விட்டு விட்டு திரும்பி பார்க்காமல் வீடு வந்து குளித்து விடவும். பாலை மூடாமல் கொண்டு செல்ல வேண்டும். மரம் அருகில் இல்லாதவர்கள் ஒரு ப்ளாஸ்டிக் பாட்டிலில் பாலை மாற்றி கொண்டு செல்லலாம். பாட்டிலை மூடக்கூடாது. இதை வாரா வாரம் செய்து வரலாம். தொடர்ந்து 11 வாரங்கள் செய்ய பலன் மிகும்.

**6.கடன் ;**

(1) புளிய மரத்தின் சிறு கிளையை வீட்டில் பணம் வைக்கும் இடத்தில், வியாபார இடத்தில், பண பெட்டியில் வைத்து வரவும்.

(2) வெல்லத்தால் பாயசம் செய்து தொடர்ந்து 5 நாட்களுக்கு உங்களின் கையால் பசுவிற்கு வழங்கி வரவும்.

(3) தொடர்ந்து 5 நாட்களுக்கு பசியால் வாடும் ஒருவருக்கேனும் உணவு உங்கள் கையால் வாங்கி கொடுக்கவும்

(4) வியாழக்கிழமை அன்று கொஞ்சம் குங்குமம் வாங்கி அதை வெள்ளிக்கிழமைகளில் அம்பாள் அல்லது தாயார் சன்னதியில் கொடுத்து வரவும். தொடர்ந்து 11 வாரங்கள் செய்ய வேண்டும்.

(5) கோதுமையை அரைக்க கொடுக்கும் பொழுது அதில் துளசி இலைகள் மற்றும் சிறிது குங்குமப்பூ சேர்த்து அரைக்க கொடுத்து வாங்கவும். அந்த மாவு வீட்டில் உள்ளவரை பண பிரச்சனைகள் குறைந்து இருப்பதை அனுபவத்தில் காணலாம். (கோதுமையாக வாங்கி செய்யவும்)

(6) தொடர்ந்து 5 வெள்ளிக்கிழமைகள் மஹாலக்ஷ்மி சன்னதியில் மல்லிகை மாலை சாற்றி வழிபடவும்

**வேலையின்மை**

7)வேலையின்மை, அலுவலகத்தில் பிரச்சனை தீர தாந்த்ரீக பரிகாரம்

அலுவலகத்தில் தொடர்ந்து தொல்லைகள், பதவி உயர்வு மறுப்பு, மதிப்பின்மை அல்லது பல நாட்கள் தேடியும் வேலையே கிடைக்காத தன்மை போன்றவை விலக கீழ்க்கண்ட பரிகாரம் மிகுந்த பலன் தரும்.

நம்பிக்கையுடன் செய்து வரலாம்.இது போன்று பல பரிகார முறைகள் நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய வழிகள் மட்டும் தொடராமல் வட நாட்டினர் முறைகளையும் தொடர்ந்து அங்கு கொடுக்கப்பட்டுள்ள தாந்த்ரீக பரிகாரங்களையும் சோதித்து பின்பு கொடுத்து வருவதால், பக்தியுடன் செய்வோருக்கு பலன் நிச்சயம்

சனிக்கிழமையாக தேர்ந்தெடுத்து 1 கிலோ கருப்பு உளுந்து மற்றும் 1 கிலோ நிலக்கரி இரண்டையும் 1 மீட்டர் நீளம் மற்றும் அகலம் கொண்ட கருப்பு துணியில் நன்றாக முடிந்து வைத்து, அதை சாதகர் தலை மற்றும் உடலை 21 முறை வலது புறமாக சுற்றி (வேறு நபர் சுற்றலாம்) பின்பு அதை ஓடும் நீரில் (ஆறு,ஏரி,கடல்,நீர் நிலைகள்) விட்டு விட வேண்டும்.பின்பு அங்கேயே நின்று ராம பக்த ஆஞ்சநேயரை மனதார வேண்டி கொண்டு வீடு திரும்ப,விரைவில் நல்ல செய்தி வரும். இதை சனிக்கிழமை காலை 6–7 அல்லது 1–2 செய்ய மிகுந்த பலன் தரும். முடியாதவர்கள் வேறு நேரங்களில் செய்யலாம். மாலை 6 மணிக்கு முன்பு செய்து விட வேண்டும். மற்றபடி இதற்கு மந்திரம்,திசை போன்றவை ஏதும் இல்லை. வீட்டிலேயே சுற்றி விட்டு பின்பு எடுத்து சென்று நீரில் விடலாம்.

**4 முக ருத்திராட்சம்?**

பொதுவாக ருத்திராட்சமானது அனைவரும் அணிய வேண்டிய ஒன்று, ஆண் பெண் பேதமில்லை எப்போதும் கழுத்தில் தரித்திருக்க வேண்டும் என்றே ‘ருத்ரக்ஷஜபாலா’ உபநிஷது கூறுகிறது. அதிலும் 4 முக ருத்திராட்சமானது மனத்தெளிவை கொடுக்கவல்லது. மேலும் அறிவை விருத்தி செய்யும்.இதை அணிந்த குழந்தைகள் நன்றாக படிப்பார்கள். ஆஸ்துமா, ஞாபக சக்தி குறைவு போன்றவற்றை நீக்கும். குழந்தைகள், ஆசிரியர்கள் மேலும் எப்போதும் மனக்கவலை, விரக்தி போன்றவை உள்ளோர் அவசியம் அணிந்து ‘‘ஓம் ஹ்ரீம் நமஹ்’’ மந்திரத்தை தினசரி 108 முறை கூறி வர அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

## ராஜஸ்தானில் பஸ் - லாரி மோதி தீ விபத்து; பலி 8

ஜெய்ப்பூர், ஜூலை. 01–



ராஜஸ்தானில் லாரி மீது பஸ் மோதி ஏற்பட்ட தீவிபத்தில் பயணிகள் 8 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். நள்ளிரவு 2.30 மணியளவில், மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் நோக்கி பஸ் அதிவேகமாக சென்று கொண்டிருந்தது. ராஜஸ்தானின் தவுசா அருகே டில்லி–மும்பை விரைவுச்சாலையில் லாரி மீது பஸ் பயங்கரமாக மோதியுள்ளது. அதைத் தொடர்ந்து, இரண்டு வாகனங்களும் தீப்பற்றி எரிந்தன.

பஸ்ஸில் தீப்பற்றி இருப்பதை உணர்ந்த பயணிகள் உடனடியாக அலறியபடி வெளியேற முயன்றனர். அவர்களை ஒரு சிலர் தப்பிக்க முடியாமல் சிக்கிக் கொண்டனர். இந்த தீவிபத்தில் பயணிகள் 8 பேர் உயிரிழந்தனர். மேலும், 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீயணைப்புத் துறையினர் போராடி தீயை அணைத்தனர். விபத்துக்கான சரியான காரணம் தெரியாத நிலையில், பஸ் ஓட்டுநர் தூங்கியிருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர். பஸ்ஸின் அதிவேகமும் இந்த விபத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## முட்டையை உடைக்கும் போது அதில் இரத்த புள்ளி இருக்கா..? அதை சாப்பிடலாமா அல்லது தூக்கி எறிந்துவிட வேண்டுமா?



முட்டைகள் அதிக சத்துக்கள் நிறைந்த உணவுகளில் ஒன்றாகும். உடலுக்குத் தேவையான உயர்தர புரதத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வைட்டமின் 'சி'யைத் தவிர மற்ற அனைத்து அத்தியாவசிய வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் நுண் சத்துக்களையும் இவை கொண்டுள்ளன. அதனால்தான் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரும் தங்கள் அன்றாட உணவில் முட்டையைச் சேர்த்துக்கொள்கிறார்கள். வேகவைத்த முட்டை, ஆம்லெட், போச் செய்யப்பட்ட முட்டை (poached egg) அல்லது முட்டைக் குழம்பு எனப் பல்வேறு வகைகளில் முட்டையை உண்பது உடலுக்குச் சிறந்த சத்துக்களை அளிக்கிறது. குறைந்த விலையில் கிடைக்கும் இந்த முட்டை ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியது.

நடுத்தர அளவுள்ள ஒரு முட்டையில் சுமார் 74 முதல் 77 கிலோகலோரி ஆற்றல், 8 கிராம் வரை புரதம் மற்றும் 5 கிராமுக்கு மேல் கொழுப்பு உள்ளது. இதில் வைட்டமின் A, D, B காம்ப்ளக்ஸ் மற்றும் வைட்டமின் B12 போன்ற சத்துக்களும் நிறைந்துள்ளன. முட்டையில் உள்ள லுடீன் (lutein) மற்றும் ஜியாக்சாந்தின் (zeaxanthin) ஆகிய ஆன்டி–ஆக்ஸிடன்ட்கள் கண் ஆரோக்கியத்தைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பாஸ்பரஸ் எலும்புகளை வலிமையாக வைத்திருக்கிறது, அதே சமயம் துத்தநாகம் (zinc) நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. அதனால்தான் சமச்சீரான உணவின் ஒரு பகுதியாக முட்டையைச் சேர்த்துக்கொள்ளுமாறு ஊட்டச்சத்து நிபுணர்களும் பரிந்துரைக்கின்றனர்.

இருப்பினும், சில சமயங்களில் முட்டையை உடைக்கும்போது அதன் மஞ்சள் கருவில் சிறிய சிவப்பு நிற இரத்தப் புள்ளி காணப்படலாம். இதைப் பார்த்தவுடன், முட்டை கெட்டுப்போய்விட்டதாக நினைத்து பலர் அதை உடனடியாகத் தூக்கி எறிந்துவிடுகிறார்கள். அத்தகைய முட்டையை உண்பது ஆரோக்கியத்திற்குத் தீங்கானது என்றும் சிலர் நம்புகிறார்கள். ஆனால் நிபுணர்களின் கூற்றுப்படி, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த அச்சத்திற்கு எந்த அடிப்படையும் இல்லை.

சந்தையிலோ அல்லது பண்ணையிலோ நேரடியாக வாங்கப்படும் முட்டைகளில் இத்தகைய இரத்தப் புள்ளிகள் தோன்றலாம். முட்டை உருவாகும் செயல்முறையின்போது, கருப்பையில் உள்ள ஒரு சிறிய இரத்தக் குழாய் உடைவதால் இந்தச் சிறிய புள்ளிகள் ஏற்படுகின்றன. இது ஒரு இயற்கையான செயல்முறையின் ஒரு பகுதியாகும். இந்த இரத்தப் புள்ளிகள், முட்டை கருவுற்றிருப்பதையோ அல்லது அதற்குள் குஞ்சு வளர்வதையோ குறிக்காது.

இரத்தப் புள்ளியைப் பார்ப்பது உங்களுக்குச் சிரமமாக இருந்தால், அதை ஒரு ஸ்பூன் அல்லது கத்தியைக் கொண்டு அகற்றிவிட்டு, முட்டையை நன்கு வேகவைத்தோ அல்லது பொரித்தோ சாப்பிடலாம். சரியான வெப்பநிலையில் முழுமையாகச் சமைக்கப்பட்ட முட்டைகளை உண்பது பொதுவாக எந்த உடல்நலப் பிரச்சினையையும் ஏற்படுத்தாது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

சில சமயங்களில், முட்டையில் திசுக்களின் சிறிய துண்டுகளும் காணப்படலாம். இவை முட்டை உருவாகும் போது இயற்கையாகவே உருவாகும் திசுக்களே ஆகும். இவையும் பொதுவாக ஆபத்தானவை அல்ல. பழுப்பு நிற ஓடு கொண்ட முட்டைகளில் இத்தகைய இரத்தப் புள்ளிகள் காணப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்; ஏனெனில், பழுப்பு நிற ஓடு காரணமாக முட்டையைச் சோதிக்கும்போது சிறிய புள்ளிகள் வெளிப்படையாகத் தெரியாமல் போகலாம்.

இருப்பினும், ஒவ்வொரு நிற மாற்றமும் பாதுகாப்பானது என்று கருத வேண்டாம். முட்டையின் வெள்ளைக்கரு இளஞ்சிவப்பு, பச்சை அல்லது சிவப்பு நிறமாக மாறியிருந்தால், அத்தகைய முட்டையை நீங்கள் சாப்பிடக்கூடாது. இது சூடோமோனாஸ் போன்ற பாக்டீரியாக்களால் ஏற்படும் மாசுபாட்டின் அறிகுறியாக இருக்கலாம். அத்தகைய முட்டைகள் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும், எனவே அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். மேலும், முட்டை கெட்ட வாசனையுடன் இருந்தாலோ அல்லது இயற்கைக்கு மாறான நிறத்தில் இருந்தாலோ, நீங்கள் அதைப் பயன்படுத்தக்கூடாது.

முட்டைகளை வாங்கிய பிறகு, அவற்றை சரியான வெப்பநிலையில் குளிர்சாதனப் பெட்டியில் சேமிக்க வேண்டும். சமைப்பதற்கு முன், ஓட்டில் விரிசல்கள் உள்ளதா எனச் சரிபார்க்கவும். முட்டைகளை நன்கு வேகவைப்பது அல்லது எண்ணெயில் பொரிப்பது பாக்டீரியாக்களின் அபாயத்தைக் குறைக்கிறது. முறையாகச் சேமித்து, சரியாக சமைக்கப்பட்டால், முட்டைகள் மிகவும் ஆரோக்கியமான உணவாகும்.

## பழனி முருகன் கோவிலில் உண்டியல் காணிக்கை!



பழனி, ஜூலை 01–

பழனி முருகன் மலைக் கோவிலில் உண்டியல் எண்ணும் பணி நடைபெற்றது. இதில் கோயில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து மற்றும் கோயில் ஊழியர்கள் கல்லூரி மாணவ மாணவியர்கள் ஈடுபட்டனர். இதில் உண்டியல் காணிக்கை பணமாக ஒரு கோடியே 40 ஆயிரத்து, 575 கிடைத்தது. தங்கம் 187.2 கிராம் கிடைத்தது. வெள்ளி 40.35 கிலோ கிடைத்தது. வெளிநாட்டு கரன்சி நோட்டுகள் 255 கிடைத்தது. கடந்த ஆண்டுகளை விட தற்போது அதிக பட்சமாக ரூபாய் 61 கோடியே, 21 லட்சத்து, 95 ஆயிரத்து, 387 கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் கூறியுள்ளது.

# தவெக தலைமையில் புதிய கூட்டணி?

சென்னை, ஜூலை. 01–

தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டி யிட்ட நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க. 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. தேர்தலுக்கு முன் த.வெ.க.வுடன் கூட்டணி அமைப்பவர்களுக்கு ஆட்சி, அதிகாரத்தில் பங்கு உண்டு என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் யாரும் கூட்டணி அமைக்காத நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியான உடன் முதல் கட்சியாக காங்கிரஸ் கட்சி த.வெ.க.வுக்கு ஆதரவு தெரிவித்து கூட்டணியை உறுதிப்படுத்தியது.



அதைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் த.வெ.க. கூட்டணியில் இணைந்தன. கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் ம.தி.மு.க.வும் த.வெ.க. கூட்டணியில் இணைவதாக அறிவித்துள்ளது. அதே நேரம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பலர், தங்களது பதவியை ராஜினாமா செய்துகொண்டு த.வெ.க.வில் இணைந்து வருகிறார்கள்.

### கூட்டணிக் கட்சிகள் கூட்டம்

இந்த நிலையில், த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்துள்ள கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைத்து தங்கள் கூட்டணிக்கு நல்ல ஒரு பெயரை சூட்டி, தங்கள் கூட்டணியை வலுப்படுத்தி, 5 ஆண்டுகள் ஆட்சியை இடையூறு இல்லாமல் கொண்டு செல்ல முதல்–அமைச்சர் விஜய் முடிவு செய்துள்ளார்.

இதற்காக சென்னையை அடுத்த கோவளத்தில் அமைந்துள்ள 'பிஷர்மேன்ஸ் கோவ் ரிசார்ட்'டில் முதல்–அமைச்சரும், த.வெ.க. தலைவருமான விஜய் தலைமையில் ஆதரவு கட்சித் தலைவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இது ஆட்சி அமைந்த பின் த.வெ.க. தலைமையில் நடைபெறும் முதல் கூட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

### கூட்டணிக்கு பெயர்

இந்த கூட்டத்தில், அரசு அமைவதற்கும், ஆட்சி செயல்பாடு களுக்கும் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் தோழமை கட்சித் தலைவர்களுக்கு முதல்–அமைச்சர் விஜய் தனது நன்றியை நேரில் தெரிவிக்க உள்ளார். மேலும், த.வெ.க. தலைமையில் மாநிலத்தில் ஒரு வலுவான, முறையான மதச்சார்பற்ற கூட்டணியை அதிகாரப்பூர்வமாக கட்டமைப்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டு கூட்டணிக்கான பெயர் சூட்டு விழாவும் நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது.

அதற்காக 'மதசார்பற்ற சமூகநீதி கூட்டணி', 'தமிழ்நாடு முற்போக்கு சமூகநீதி கூட்டணி' என்ற பெயர்களும் பரிசீலனையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த கூட்டத்தில் காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க. மற்றும் ஐ.யூ.எம்.எல். கட்சிகள் பங்கேற்க உள்ளன. த.வெ.க. அரசுக்கு வெளியில் இருந்து மட்டுமே ஆதரவு அளிப்பதால், கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என்று இடதுசாரிகள் அறிவித்துள்ளன. மேலும் கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

### முக்கிய ஆலோசனைகள்

இந்த கூட்டத்தில், கூட்டணிக்கு என தனியாக ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் செய்யப்படுவதுடன் பொதுவான வழிகாட்டுதல் குழுவும் உருவாக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இது தவிர, வரவிருக்கும் உள்ளாட்சி தேர்தல்கள், சட்டமன்ற இடைத் தேர்தல்களை கூட்டணி கட்சிகள் இணைந்து எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த முக்கிய ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், காவிரி விவகாரம், மேகதாது அணை பிரச்சினை, இருமொழிக் கொள்கை உள்ளிட்ட மாநில உரிமைகள் சார்ந்த முக்கிய பிரச்சினைகளில் கூட்டணி கட்சிகளின் கருத்தையும் கலந்து ஆலோசித்து ஒன்றிணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது. இது தவிர கூட்டணி கட்சிகளின் விருப்பங்கள் என்னென்ன இருக்கிறது. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சாத்தியக்கூறுகள் என்னவென்றும் ஆலோசிக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

# ஜூலை 20-ல் நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர்?

புதுடெல்லி, ஜூலை. 01–

நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் ஜூலை 20–ஆம் தேதி தொடங்கி மூன்று வாரங்களுக்கு நடைபெற வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு இது குறித்து இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை. பொதுவாக, மழைக்கால மற்றும் குளிர்காலக் கூட்டத்தொடர்கள் நான்கு வாரங்களில் 20 அமர்வுகளைக் கொண்டிருக்கும்; இருப்பினும், இதற்கு முன் குறுகிய காலக் கூட்டத்தொடர்கள் நடைபெற்ற முன்னுதாரணங்களும் உள்ளன.



### உட்கட்சிப் பூசல்:

மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் ஆளும் பா.ஜ.க. வெற்றி பெற்றதை தொடர்ந்து இந்த கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சிவசேனா கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள உட்கட்சி பூசல்களும் இந்த கூட்டத்தொடரில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனித்தனி குழுக்களாக அங்கீகாரம் கோரும் 20 திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் 6 சிவசேனா எம்.பி.க்களின் கோரிக்கைகள் குறித்து மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா எடுக்கும் முடிவை அனைவரும் எதிர்நோக்கியுள்ளனர்.

### அரசுக்கு ஏமாற்றம்:

மாநிலங்களவையில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் பதவியேற்ற பிறகு, அரசியல் ரீதியான பலம் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு சாதகமாக மேலும் அதிகரித்துள்ளது. கடந்த கூட்டத்தொடர் அரசுக்கு ஏமாற்றத்துடன் முடிவடைந்தது.

ஏனெனில், 2029–ஆம் ஆண்டில் சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கும், மக்களவை இடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கும் அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் தோல்வியடைந்தது.

அனைத்து மாநிலங்களின் மக்களவை இடங்களையும் ஒரே சீராக 50 சதவீதம் வரை அதிகரிக்கும் வகையில், அரசு தற்போது அந்த மசோதாவை மாற்றியமைத்து வருகிறது. மக்கள்தொகை அடிப்படையில் இடங்களை அதிகரிப்பது தென்னிந்திய மாநில கட்சிகளுக்கு ஒரு முக்கிய கவலையாக இருந்து வருகிறது.

# அதிமுக முன்னாள் அமைச்சர்கள் இருவர் தவெகவில் ஐக்கியம் - மாமல்லபுரத்தில் பிரம்மாண்ட ஏற்பாடு!

சென்னை, ஜூலை. 01–

அ.தி.மு.க.வில் இருந்து எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஜெயக்குமார் (பெருந்துறை), மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகியோர் த.வெ.க.வில் இணைந்தனர். அதேபோன்று எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துள்ள டாக்டர் சி.விஜயபாஸ்கர் (விராலிமலை), எம்.ஆர்.விஜயபாஸ்கர் (கரூர்) ஆகியோரும் த.வெ.க.வில் இணைய உள்ளனர்.



சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் இணைப்பு விழா நடைபெறுகிறது.

### 15 ஆயிரம் பேருடன்...

புதுக்கோட்டையில் இருந்து 200 பஸ்கள், 500 கார்கள் மூலம் தனது ஆதரவாளர்கள் 15 ஆயிரம் பேருடன் வருகை தந்து த.வெ.க.வில் இணைய உள்ளதாக டாக்டர் விஜயபாஸ்கர் தகவல் தெரிவித்துள்ளார். அதேபோன்று எம்.ஆர். விஜயபாஸ்கரும் தனது ஆதரவாளர்களுடன் இணைகிறார். இவர்கள் 2 பேருடன் புதுக்கோட்டை, கரூர், திருச்சி, தஞ்சை, பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து அ.தி.மு.க.வை சேர்ந்த 3 முன்னாள் அமைச்சர்கள், 10 முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், 8 மாவட்ட செயலாளர்கள், 250 பொதுக்குழு உறுப்பினர்களும், சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட்டவர்கள் என பலரும் த.வெ.க.வில் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# பிலிப்பைன்ஸில் வெடித்து சிதறிய தால் எரிமலை!

பிலிப்பைன்ஸ், ஜூலை. 01

பிலிப்பைன்ஸின் படாங்காஸ் மாகாணத்தில் உள்ள தால் எரிமலையின் பிரதான எரிமலைவாய்ப் பகுதியில் நேற்று எரிமலை வெடிப்பு நிகழ்ந்தது. இந்த நீராவி–மக்மா வெடிப்பை பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நிலநடுக்கவியல் நிறுவனம் பதிவு செய்துள்ளது. இந்த எரிமலை வெடிப்பினால் எரிமலைவாய்ப் பகுதிக்கு மேலே 1,200 மீட்டர் உயரத்திற்கு கரும் சாம்பல் புகைகள் எழுந்தன.



இந்நிலையில் எரிமலைக்கு அருகில் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பைவோல்க்ஸின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளைக் கண்காணிக்குமாறும், மற்றும் தயார்நிலை குறித்த உள்ளூர் அரசாங்க வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பைவோல்க்ஸின் அதிகாரப்பூர்வ தகவலின் படி இந்த தால் எரிமலையில் ஏற்பட்ட பெரும் வெட்டிபு ஏறத்தாழ நானரை நிமிடங்கள் நீடித்தாக தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் பதிவு செய்த வீடியோ மற்றும் வெப்ப காட்சிப்படங்களை வெளியிட்டனர்.

எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து உடனடியாக குறிப்பிடத்தக்க நில அதிர்வுகளோ அல்லது நில உருக்குலைவு அதிகரிப்புகளோ பதிவாகவில்லை. தற்போது வரை இந்த எரிமலை மீது எச்சரிக்கை நிலை 1–ஐ பராமரித்து வருகிறனர். இந்த எச்சரிக்கையின் கீழ், திடீர் நீராவி உந்துதல் அல்லது நிலத்தடி நீர் வெடிப்புகள், எரிமலை நிலநடுக்கங்கள், சிறிய சாம்பல் வீழ்ச்சி மற்றும் வாயு வெளியேற்றங்கள் ஆகியவை மேலதிக முன்னறிவிப்பின்றி தொடர்ந்து ஏற்படக்கூடும்.

இதனால் தால் எரிமலைத் தீவு ஒரு நிரந்தர அபாய மண்டலமாக நீடிப்பதாகவும், அங்கு நிரந்தரமாகக் வசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தீவிலோ அல்லது எரிமலைவாய்ப் பகுதியிலோ நீண்ட காலம் தங்குவதைத் தவிர்க்குமாறும் அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினர்.

# வேலை வாய்ப்பு

## ரயில்வேயில் மெகா வேலைவாய்ப்பு.. 6,565 காலியிடங்கள்..!

ரயில்வே துறையின் கீழ் நாடு முழுவதும் உள்ள அனைத்து ரயில்வே மண்டலங்களிலும் தொழில்நுட்ப வல்லுநர் (Technician) பணியிடங்களை நிரப்புவதற்கான முழுமையான அறிவிப்பை ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB) வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் மொத்தம் 6,557 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதில் 323 'டெக்னீஷியன் கிரேடு 1 சிக்னல்' (Technician Grade 1 Signal) பணியிடங்களும், 6,565 'கிரேடு 3' (Grade 3) பணியிடங்களும் அடங்கும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் ஜூன் 30, 2026 முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

இப்பணியிடங்கள் டிராக் மெஷின் (Track Machine), பாலம் (Bridge), டீசல் எலக்ட்ரிக்கல்/மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல்/மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல்/TRS, EMU, ஃபிட்டர் (Fitter), வெல்டர் (Welder), தச்சர் (Carpenter) போன்ற பிரிவுகளில் நிரப்பப்படும். பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது ஆன்லைன் எழுத்துத் தேர்வின் அடிப்படையில் அமையும். பிற விவரங்களை கீழே காணலாம்.

'டெக்னீஷியன் கிரேடு 1 சிக்னல்' பணியிடங்களுக்கு, விண்ணப்பதாரர்கள் B.Sc அல்லது ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு அல்லது டிப்ளமோ (Diploma) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 'டெக்னீஷியன் கிரேடு 3' பணியிடங்களுக்கு, 10–ஆம் வகுப்பு, ITI, B.Sc, பட்டப்படிப்பு அல்லது டிப்ளமோ தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு: 'டெக்னீஷியன் கிரேடு 1' பணியிடங்களுக்கு 18 முதல் 33 வயது வரையிலும், 'டெக்னீஷியன் கிரேடு 3' பணியிடங்களுக்கு 18 முதல் 30 வயது வரையிலும் இருக்க வேண்டும். தகுதியுடையவர்கள் ஜூலை 29, 2026–க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணமாக, பொதுப் பிரிவினர் ரூ. 500–ம், SC/ST/முன்னாள் ராணுவத்தினர்/மாற்றுத்திறனாளிகள் (PWBD)/பெண்கள்/திருநங்கைகள்/EBC பிரிவினர் ரூ. 250–ம் செலுத்த வேண்டும். கணினி வழித் தேர்வில் (CBT) பங்கேற்பவர்களுக்கு ரூ. 400 வரை (வங்கி கட்டணங்கள் நீங்கலாக) கட்டணம் திரும்ப வழங்கப்படும். விண்ணப்பதாரர்களின் இறுதித் தேர்வு, ஆன்லைன் எழுத்துத் தேர்வு மற்றும் மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

### தேர்வு முறை

கணினி வழித் தேர்வானது மொத்தம் 90 நிமிடங்களில் 100 கேள்விகளைக் கொண்டிருக்கும். பொது விழிப்புணர்வு (10 கேள்விகள், 10 மதிப்பெண்கள்), பொது நுண்ணறிவு மற்றும் பகுத்தறிவு (15 கேள்விகள், 15 மதிப்பெண்கள்), அடிப்படை கணினி மற்றும் பயன்பாடுகள் (20 கேள்விகள், 20 மதிப்பெண்கள்), கணிதம் (20 கேள்விகள், 20 மதிப்பெண்கள்), அடிப்படை அறிவியல் மற்றும் பொறியியல் (35 கேள்விகள், 35 மதிப்பெண்கள்) ஆகிய தலைப்புகளில் கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு தவறான பதிலுக்கும் 1/3 மதிப்பெண் குறைக்கப்படும்.

### முக்கியமான தேதிகள்

ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் தேதி: ஜூன் 30, 2026.

ஆன்லைன் விண்ணப்பத்திற்கான கடைசி தேதி: ஜூலை 29, 2026.

கட்டணம் செலுத்துவதற்கான கடைசி தேதி: ஜூலை 31, 2026.

விண்ணப்பத் திருத்தத்திற்கான தேதிகள்: ஆகஸ்ட் 1 முதல் 10 வரை.

எழுத்துத் தேர்வு தேதிகள்: விரைவில் அறிவிக்கப்படும்.

## மாத தொடக்கத்தில் குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 01–

மாத தொடக்க நாளில் தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 100 ரூபாய் குறைந்து கிராம் 13,100 ரூபாய்க்கும் சவரனுக்கு 800 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் ரூ.245–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 45 ஆயிரத்துக்கும் விற்பனையாகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# தயங்கும் ஸ்டாலின்; வற்புறுத்தும் உதயநிதி!

சென்னை, ஜூலை. 01–

தமிழக சட்டசபை தேர்தலில், தி.மு.க., தோல்வி அடைந்தது. தோல்விக்கான காரணங்களை கண்டறிய, கள ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு, 234 தொகுதிகளுக்கும் சென்று, கட்சியினரை சந்தித்து பேசி, கட்சி தலைமைக்கு அறிக்கை அளித்துள்ளது.



அதில், முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலர்கள் மீது குற்றச்சாட்டுகள் அதிகமாக இருக்கின்றன. தொகுதிக்கு இரண்டு மாவட்ட செயலர்களை நியமிக்க வேண்டும் என்ற ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது.

கள ஆய்வு அறிக்கையின்படி, முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், உட்கட்சியில் பிளவு ஏற்பட்டு, கட்சியின் கட்டமைப்பே பாதிக்கப்படும். எனவே, கட்சி நிர்வாகிகளை அழைத்து, அவர்களிடம் விசாரணை நடத்திய பின், எச்சரிக்கை விடுத்து அனுப்புவோம் என ஸ்டாலின் கருதுகிறார்.

ஆனால், 'கள ஆய்வுக்குழு அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிர்வாகிகளை காப்பாற்றக்கூடாது, தவறு செய்தவர்கள் மீது தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்து, இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்க வேண்டும்.

'அமைப்பு ரீதியாக இரண்டு சட்டசபை தொகுதிகளுக்கு, ஒரு மாவட்ட செயலரை நியமிக்க வேண்டும்' என, ஸ்டாலினிடம் உதயநிதி வலியுறுத்தி உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்டாலின் தயங்குவதால், கள ஆய்வின் அடிப்படையில், கட்சி கட்டமைப்பில் பெரிய மாற்றங்கள் நிகழுமா, நிகழாதா என்ற கேள்வி, அக்கட்சி வட்டாரங்களில் எழுந்துள்ளது.

# அமைச்சருடன் மரியாதை நிமித்த சந்திப்பு!




திருப்பத்தூர், ஜூலை. 01–

திருப்பத்தூர் தொகுதி (50) சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ந. திருப்பதி, B.V.Sc., அவர்கள், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையனை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, திருப்பத்தூர் தொகுதியின் வளர்ச்சி, வருவாய் நிர்வாகம், நிலம் தொடர்பான பொதுமக்களின் கோரிக்கைகள், பேரிடர் முன்னெச்சரிக்கை மற்றும் மேலாண்மை நட வடிக்கைகள், மக்கள் நலத் திட்டங்கள், அத்தியாவசிய அரசு சேவைகள் விரைவாக பொது மக்களை சென்றடைவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

திருப்பத்தூர் தொகுதி மக்களின் நலன் சார்ந்த கோரிக்கைகளை அமைச்சர் அவர்கள் கனிவுடன் கேட்டறிந்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார்.



திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், சின்னியம்பாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டார்கள்.

# ஒட்டன்சத்திரத்தில் நடன பயிற்சி அரங்கேற்றம்/ சலங்கை பூஜை விழா!

ஒட்டன்சத்திரம், ஜூலை. 01–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்று வரும் நடராஜ நாட்டியாலயா இசை மற்றும் நடனப்பள்ளியின் சலங்கை பூஜை விழா மற்றும் இரண்டு ஆண்டுகளாக பயிற்சி பெற்ற மாணவிகளின் முதல் அரங்கேற்றம் நிகழ்ச்சி அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயிலில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக குத்துவிளக்கேற்றி தொடங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஒட்டன்சத்திரம் நடராஜ நாட்டியாலயா நடனப்பள்ளியில் இரண்டு ஆண்டுகளாக பயிற்சி பெற்ற மாணவிகளின் காலில் அணியும் சலங்கை களுக்கு பூஜை மற்றும் சிறப்பு செய்யப்பட்டு மாணவிகளின் காலில் அணிவிக்கப்பட்டது தொடர்ந்து மாணவிகளின் முதல் அரங்கேற்றம் சிறப்பாக நடந்து முடிந்தது.

இந்நிகழ்வில் நடனப்பள்ளி ஆசிரியர்கள், மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டு மாணவிகளின் பரதநாட்டிய கலை நிகழ்ச்சிகளை கண்டு ரசித்தனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் வடபுதுப்பட்டி ஊராட்சி பின்னத்தேவன்பட்டியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடைபெறும் 9ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பு தடுப்பூசி முகாமினை மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

# 16-வது வருடாந்திர உச்சி மாநாடு: ஜப்பானிய பிரதமர் டெல்லி வருகை!




புதுடெல்லி, ஜூலை. 01–

இந்தியா–ஜப்பான் இடையேயான வருடாந்திர உச்சி மாநாடு இந்த மாதம் நடைபெற உள்ளது. இந்த 16வது உச்சி மாநாடு டெல்லியில் நடைபெற வுள்ளது. கடந்த 15–வது உச்சி மாநாடு 2025 ஆகஸ்ட் மாதம் ஜப்பானில் நடைபெற்றது.

இந்த 16வது உச்சி மாநாடு இன்று தொடங்கி ஜூலை 3 வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க ஜப்பானிய பிரதமர் சானே டகாயிச்சி, மூன்று நாள் அரசுமுறை பயணமாக இன்று மாலை டெல்லி வந்தடையவுள்ளார்.

இது இரு நாடுகளுக்கிடையே, பரஸ்பர உறவுகளை மேம்படுத்தும் மிக முக்கியமான இருதரப்பு அரசுமுறை சந்திப்பாகும். மேலும் டகாயிச்சியின் இந்தியப் பயணம், முதலீடு மற்றும் புத்தாக்க வாய்ப்புகளை அதிகரிக்கவும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன் குறைக்கடத்திகள் மற்றும் கனிமங்கள் போன்ற துறைகளில் மீள்திறன் கொண்ட விநியோகங்களை கடமைப்பதற்கான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்திடுதல், பாதுகாப்புத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் வங்காள விரிகுடாவையும் வடகிழக்கு இந்தியாவையும் இன்னைக்கும் கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகிவற்றில் கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டகாயிச்சி முன்வைத்த இந்தோ–பசிபிக் கொள்கையை முன்னெடுத்து செல்வதில் இந்தியா மிகப்பெரும் பங்கு வகித்து வருகிறது. இந்நிலையில் இந்த பயணத்திதில் சீயக்காய் நுண்ணறிவு ஒத்துழைப்பு தொடர்பாக அறிவிக்கப்படலாம் என்றும் வல்லுநர்கள் தகவல்கள் தெரிவித்து வருகின்றார்.

# அதிமுகவிலிருந்து முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் விலகல்!



சென்னை, ஜூலை. 01–

அதிமுகவிலிருந்து விலகுவதாக முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின் அதிமுகவில் தொடர்ந்து துரோகத்தைச் சந்தித்தவன் நான். கட்சித் தலைமையின் சுயநலப் போக்கு மற்றும் தொண்டர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காத நிலையே எனது இந்த முடிவுக்குக் காரணம் என அதில் கூறியுள்ளார். அதிமுக தலைமை மீதான அதிருப்தி காரணமாக தொடர்ந்து மூத்த நிர்வாகிகள் விலகி வருவது கட்சியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சினிமா துளிகள்..!

# கிருத்திகா உதயநிதி இயக்கத்தில் விஜய் சேதுபதி-ரியா ஷிபு!!



கிருத்திகா உதயநிதி இயக்கும் இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது சென்னையில் மிக ரகசியமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது. இந்த முதற்கட்டப் படப்பிடிப்பு இன்னும் ஒரு வாரத்திற்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

உறவுகளுக்குள் இருக்கும் சிக்கலான உணர்வுகளையும், காதலையும் தனது பாணியில் நேர்த்தியாகக் கையாளும் கிருத்திகா உதயநிதி, இம்முறையும் உணர்வுப்பூர்வமான ஒரு எண்டர்டெய்னர் கதையை கையில் எடுத்துள்ளார். ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் இத்திரைப்படத்தை பிரம்மாண்டமான பட்ஜெட்டில், பிரமாதமான காட்சிகளுடன் தயாரித்து வருகிறது.

கிருத்திகா உதயநிதி படத்தின் ஒரு வார காலப் படப்பிடிப்பை முடித்த கையோடு, விஜய் சேதுபதி தனது அடுத்த பிரம்மாண்ட மைல்கல்லான இயக்குநர் சிகரம் மணிரத்னத்தின் புதிய திரைப்படத்தில் இணையவுள்ளார்.

மணிரத்னம், விஜய் சேதுபதி, சாய் பல்லவி கூட்டணியில் உருவாகும் இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு வரும் 7 ஆம் தேதி முதல் தொடங்கவுள்ளது. படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே இதன் ஒடிடி உரிமத்தை நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் சுமார் 20 கோடி ரூபாய்க்கு வாங்கியுள்ளது சினிமா வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கிருத்திகா உதயநிதி படம், அதைத் தொடர்ந்து மணிரத்னம் படம் என விஜய் சேதுபதியின் அடுத்தடுத்த புராஜெக்ட்கள் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

# முதல்-அமைச்சர் விஜய்யுடன் இடதுசாரி தலைவர்கள்!




சென்னை, ஜூலை. 01–

சென்னையை அடுத்த கோவளத்தில் முதல்–அமைச்சர் விஜய் தலைமையில் தமிழக வெற்றி கழகம் (த.வெ.க.) சார்பில் கூட்டணிக் கட்சிகளுடனான முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு கூட்டணிக் கட்சித் தலைவர்களை அமைச்சர்கள் என். ஆனந்த் மற்றும் ஆதவ் அர்ஜுனா நேரில் சந்தித்து அழைப்பிதழ் வழங்கினர்.

அதன்படி, விடுதலை சிறுத்தைகள் கட்சி (விசிக), மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (மதிமுக), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுக்கு அழைப்பு வழங்கப்பட்டது.

நேற்று இடதுசாரி கட்சித் தலைவர்களையும் நேரில் சந்தித்து ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

ஆனால், த.வெ.க. கூட்டணி கட்சிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இடதுசாரி கட்சிகள் தெரிவித்தன. கூட்டத்தில் பங்கேற்காவிட்டாலும், முதல்–அமைச்சர் விஜய்யை இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் சந்திக்க உள்ளதாக கூறப்பட்டது.

இந்நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்–அமைச்சர் விஜய்யை இடதுசாரி கட்சி தலைவர்கள் வீரபாண்டியன், பெ.சண்முகம் உள்ளிட்டோர் சந்தித்துள்ளனர்.

# பொறியியல் கலந்தாய்வுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியீடு!




புதுடெல்லி, ஜூலை. 01–

தமிழ்நாடு பொறியியல் மாணவர்கள் சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியலை உயர் கல்வித் துறை அமைச்சர் பெ. விஸ்வநாதன் வெளியிட்டார்.

சென்னை கிண்டியில் உள்ள தொழில்நுட்ப கல்வி இயக்குநரக அலுவலகத்தில் இளநிலை பொறியியல் படிப்புகளுக்கான அரசு ஒதுக்கீட்டு இடங்களை நிரப்புவதற்கான தரவரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு மொத்தம் 3.02 லட்சம் மாணவர்கள் விண்ணப்பித்த நிலையில், சுமார் 2.5 லட்சம் பேர் பதிவுக் கட்டணம் செலுத்தியிருந்தனர். அவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தரவரிசை வெளியிடப்பட்டதில் 1,30,767 பேர் மாணவர்கள், 1,05,246 பேர் மாணவிகள் என மொத்தம் 2,36,017 பேருக்கு தரவரிசை வெளியாகியிருக்கிறது.

இன்று வெளியிடப்பட்டிருக்கும் தரவரிசைப் பட்டியலில் 53 மாணவர்கள் 200க்கு 200 கட்–ஆஃப் மதிப்பெண் பெற்றுள்ளனர் என்று அமைச்சர் விஸ்வநாதன் அறிவித்துள்ளார்.

நிகழாண்டு மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) பிளஸ் 2 வகுப்பு மறு மதிப்பீட்டு முடிவுகள் (ஜூன் –21) தாமதமாக வெளியானது. இதனால், தமிழ்நாடு பொறியியல் மாணவர்கள் சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டு, இறுதியாக வெளியாகியிருக்கிறது.

பொறியியல் சேர்க்கைக்கான கலந்தாய்வு (கவுன்சிலிங்) தேதிகளும் அறிவிக்கப்படுகிறது.

வெளியான தரவரிசைப் பட்டியலில் ஏதேனும் குறைகள் இருந்தால் அவற்றைச் சரிசெய்வதற்கான குறைதீர்ப்பு கால அவகாசம் ஜூலை 1 முதல் ஜூலை 5–ஆம் தேதி வரை வழங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களுக்கு அருகிலுள்ள தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை சேவை மையங்களை அணுகி, இது குறித்து தீர்வு காணலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆவின் நிறுவனம் வழங்கிய நுகர்வோருக்கான சலுகைகள் ரத்து?

சென்னை, ஜூலை. 01–

பெரும் நஷ்டத்தில் சிக்கியுள்ள 'ஆவின்' நிறுவனம், நுகர்வோருக்கான மாதாந்திர பால் அட்டை மானிய சலுகையை நிறுத்தும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சென்னையில் வரும் 13ம்தேதிக்கு பின், ஆவின் பால் அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மானியம் நிறுத்தப்பட உள்ளது. இதற்காக, பால் அட்டை வழங்கும் பணியை குறைக்கும்படி, அதிகாரிகளுக்கு ரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. ஆவின் நிறுவனம் வாயிலாக சென்னையில், 14 லட்சம் லிட்டருக்கு மேல் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக வெளிமாவட்டங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் பால், டேங்கர் லாரிகள் வாயிலாக மாதவரம், அம்பத்துார், சோழிங்கநல்லுார் ஆவின் பால் பண்ணைகளுக்கு எடு த்துவரப்படுகிறது. இங்கு, கொழுப்பு சத்து அடிப்படையில் பால் பிரிக்கப்பட்டு, பாக்கெட்டில் அடைத்து விற்கப்படுகிறது. ஆரஞ்ச் நிற பால் பாக்கெட் 500 மி.லி., 30 ரூபாய்; பச்சை நிற பால் பாக்கெட் 22 ரூபாய்; ஊதா நிற பால் பாக்கெட் 22 ரூபாய்; நீல நிற பால் பாக்கெட் 20 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.




### நிறுத்த முடிவு

சென்னையை பொறுத்த வரை ஒன்பது லட்சம் பேர், மாதாந்திர பால் அட்டை வாயிலாக பால் பாக்கெட் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். ஆரஞ்ச் பால் பாக்கெட்டிற்கு ஏழு ரூபாய்; பச்சை, ஊதா நிற பால் பாக்கெட்டிற்கு தலா 1 ரூபாய்; நீல நிற பால் பாக்கெட்டிற்கு, 1.50 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. முந்தைய ஆட்சியாளர்கள் செய்த பல்வேறு குளறுபடிகள், அதிகாரிகளின் நிர்வாகத் திறனின்மை போன்ற காரணங்களால், ஆவின் நிர்வாகம் மாதம், 100 கோடி ரூபாய் வரை நஷ்டத்தை சந்தித்து வருகிறது.

பால் அட்டைக்கு ஊக்கத்தொகை வழங்குவதும், நஷ்டத்திற்கு மற்றொரு காரணமாக இருந்து வருகிறது. கோடை காலம் என்பதால், பால் உற்பத்தி குறைந்துள்ளது. பெரும் நஷ்டத்தை தவிர்ப்பதற்காக பால் அட்டைதாரர்களுக்கு தி.மு.க., ஆட்சியில் வழங்கப்பட்ட மானியத்தை நிறுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது. குறிப்பாக, ஆரஞ்ச் நிற கொழுப்பு பால் பாக்கெட்டிற்கு வழங்கப்படும் ஏழு ரூபாய் மானியத்தை முதலில் குறைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

கோவை மாவட்டத்தில், பால் அட்டைக்கு மானியம் இனி வழங்கப்படாது என, வெளிப்படையாக அறிவிக்கப்பட்டு உள்ளது. சென்னையில் வரும் 13ம் தேதிக்கு பின், ஆவின் பால் அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மானியம் நிறுத்தப்பட உள்ளது. இதற்காக, பால் அட்டை வழங்கும் பணியை குறைக்கும்படி, மண்டல அதிகாரிகளுக்கு ரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. ஆவின் நிறுவனத்தின் இந்த நடவடிக்கை நுகர்வோர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### உற்பத்தி குறைப்பு

பச்சை நிற பால் பாக்கெட்டை 28 ரூபாய்க்கு விற்றால் மட்டுமே ஆவினுக்கு லாபம் கிடைக்கும். நஷ்டத்தை தவிர்க்க தி.மு.க., ஆட்சியில் பச்சை நிற பால் பாக்கெட் உற்பத்தி குறைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு கிளம்பியதால், வழக்கம்போல உற்பத்தி செய்யப்பட்டது. த.வெ.க., அரசு பொறுப்பேற்ற நிலையில், ஆவின் அதிகாரிகள் ஆலோசனைப்படி, பச்சை நிற பால் பாக்கெட் உற்பத்தி, 50 சதவீதம் குறைக்கப்பட்டு உள்ளது. ஒரு டப்பாவில் 24 பால் பாக்கெட் வழங்குவதற்கு பதிலாக 12 பால் பாக்கெட் மட்டுமே, சில்லரை விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது. தற்போது, ஆரஞ்ச் பால் சப்ளையும் 20 சதவீதம் குறைக்கப்பட்டு உள்ளது. ஆனால், இந்த தகவலை, அரசின் உயர்மட்டத்திற்கு தெரியாத வகையில், அதிகாரிகள் மறைத்து வருவதாக கூறப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020